E-voting facility is available at the link: https://www.evotingindia.com. Postal Ballot Notice along with explanatory statement inter alia indicating process and manner of casting vote through remote e-votingby members holding shares in physical form, dematerialized form and by members who have not registered their email addresses is available at the website of the Company at www.ranegroup.com, the websites of BSE Limited at www.bseindia.com, National Stock Exchange of India Limited at www.nseindia.com and CDSL website at https://www.evotingindia.com.

Mr. Balu Sridhar, Company Secretary (ICSI Membership no. FCS 5869) and Partner of M/s. A K Jain and Associates, Company Secretaries, has been appointed by the Board as the scrutinizer to scrutinize the postal ballot in a fair and transparent manner.

The results of the postal ballot will be declared within 2 days from the date of conclusion of the postal ballot process i.e., on or before Monday, December 09, 2024 at 5.00 p.m. (IST) at the Registered Office of the Company. The Results declared along with the report of the Scrutinizer shall be placed on the website of the Company viz., www.ranegroup.comand on the website of CDSL www.evotingindia.comimmediately after the declaration of result. The results shall also be immediately forwarded to the stock exchanges where the Company's shares are listed.

If you have any queries or issues regarding e-Voting of CDSL e-Voting System, you can write an email to helpdesk.evoting@cdslindia.com or contact at toll free no. 1800 21 09911.

All grievances connected with the facility for voting by electronic means may be addressed to Mr. Rakesh Dalvi, Sr. Manager, (CDSL) Central Depository Services (India) Limited, A Wing, 25thFloor, Marathon Futurex, Mafatlal Mill Compounds, N M Joshi Marg, Lower Parel (East), Mumbai - 400013 or send an email to helpdesk.evoting@cdslindia.com or call at toll free no. 1800 21 09911 or our Registrar and Share Transfer Agents at their e-mail ID srirams@integratedindia.in.Shareholders have the option to avail the facility of Online Dispute Resolution System (ODR) introduced by SEBI vide its Circular no. SEBI/HO/OIAE_IAD – 1/P/CIR/2023/131.

By Order of the Board
**For Rane (Madras) Limited**
**S Subha Shree**
**Secretary**

Place: Chennai
Date: November 07, 2024

## EVEREST INDUSTRIES LIMITED

everest

**CIN: L74999MH1934PLC002093**
**Registered Office:** GAT No. 152, Lakhmapur, Taluka Dindori Nashik - 422202, (Maharashtra)
**Tel** +91 2557 250375/462, **Fax** +91 2557 250376, compofficer@everestind.com, www.everestind.com

### Extract of Statement of Unaudited Financial Results for the Quarter and Half year ended 30 September, 2024

(₹ in Lakhs)

| Sl. No. | Particulars | Standalone | | | | Consolidated | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 months ended | Corresponding 3 months ended in the previous year | Half Year ended | Half Year ended | 3 months ended | Corresponding 3 months ended in the previous year | Half Year ended | Half Year ended |
| | | 30.09.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 |
| | | (Unaudited) | (Unaudited) | (Unaudited) | (Unaudited) | (Unaudited) | (Unaudited | (Unaudited) | (Unaudited) |
| 1 | Total Revenue from operations | 37,395.31 | 31,714.85 | 89,505.11 | 80,129.29 | 37,682.24 | 30,760.99 | 89,915.93 | 79,175.43 |
| 2 | Net Profit/(loss) for the period before tax, exceptional items | (1,080.45) | (348.48) | 1,158.03 | 1,136.74 | (1,452.44) | (564.67) | 408.41 | 897.75 |
| 3 | Exceptional Items | - | - | 383.93 | 760.00 | - | - | 383.03 | 760.00 |
| 4 | Net Profit/(loss) for the period before tax, after exceptional items | (1,080.45) | (348.48) | 1,541.96 | 1,896.74 | (1,452.44) | (564.67) | 792.34 | 1,657.75 |
| 5 | Net Profit/(loss) for the period after tax, after exceptional items | (849.35) | (367.33) | 1,053.22 | 1,413.72 | (1,167.28) | (583.52) | 423.24 | 1,174.73 |
| 6 | Total comprehensive income for the period (after tax) | (840.32) | (374.02) | 1,071.27 | 1,400.33 | (1,165.54) | (594.19) | 434.03 | 1,157.75 |
| 7 | Equity Share Capital (Face value of ₹ 10/- each) | 1,581.98 | 1,577.20 | 1,581.98 | 1,577.20 | 1,581.98 | 1,577.20 | 1,581.98 | 1,577.20 |
| 8 | Earnings per share - Basic (₹) (not annualised) | (5.37) | (2.33) | 6.67 | 8.98 | (7.39) | (3.70) | 2.68 | 7.46 |
| 9 | Earnings per share - diluted (₹) (not annualised) | (5.37) | (2.33) | 6.62 | 8.92 | (7.39) | (3.70) | 2.66 | 7.41 |

**NOTE:**

The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the Stock Exchange websites of BSE and NSE at www.bseindia.com and www.nseindia.com respectively and on Company's website at www.everestind.com.

**For and on behalf of the Board of Directors**

Place : Mumbai
Date : 05 November, 2024

**Rajesh Joshi**
Managing Director and CEO

BUILDING SOLUTIONS | ROOFING | WALLS | FLOORS | CEILINGS | CLADDINGS | STEEL BUILDINGS

TAMILTH Chennai 1 TNadu_C HT221862
Newspaper: Hindu Tamizh Thisai
Language: Tamil
Edition: Chennai
Date of Publication: November 07, 2024





மீட்டர் பேசுது

| 32.9°C | 31.6°C | 32.9°C | 32°C | 31°C |
|---|---|---|---|---|
| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
| 31.2°C | 31.6°C | 19.2°C | 17.6°C | |
| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் | |

தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரியிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.





கோவை காந்திபுரத்தில் நூலகம், அறிவியல் மைய கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டிவைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, வி.செந்தில்பாலாஜி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்டோர். படங்கள்: ஜெ.மனோகரன்

### கோவை அனுப்பர்பாளையத்தில்

# ரூ.300 கோடியில் நூலகம் மற்றும் அறிவியல் மையம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

**கோவை**

கோவை அனுப்பர்பாளையத்தில் ரூ.300 கோடி மதிப்பில் நூலகம் மற்றும் அறிவியல் மைய கட்டுமானப் பணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டிவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் வி.செந்தில்பாலாஜி, கே.என்.நேரு, எ.வ.வேலு, அன்பில் மகேஸ் முன்னிலை வகித்தனர். தலைமைச் செயலாளர் முருகானந்தம் வரவேற்றார். தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:



விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி மதுரையில் மாபெரும் நூலகம் அமைக்கப்பட்டது. அதேபோல, கோவையிலும் நூலகம் அமைக்கப்படும் என அறிவித்தேன்.

சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்போல கோவையில் தந்தை பெரியார் பெயரில் நூலகம், அறிவியல் மையம் அமைக்கப்படும். அறிவு, ஆற்றல், பகுத்தறிவு, பகுத்துண்டு பல்லுயிர் காக்கும் தன்மை உள்ளிட்டவற்றை இளைய சமுதாயத்துக்கு கற்றுத்தந்த பெரியாரின் பெயரில் இந்த நூலகம் அமைவது பொருத்தமாக இருக்கும். 2026 ஜனவரியில் இந்நூலகம் திறக்கப்படும்.

அதேபோல, கோவை காந்திபுரத்தில் ரூ.133 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் செம்மொழிப் பூங்கா அடுத்த ஆண்டு ஜூன் மாதம் திறக்கப்படும். தங்க நகை தயாரிப்பாளர்கள் சங்க நிர்வாகிகளின் கோரிக்கையை ஏற்று, கோவை குறிச்சியில் உள்ள தொழிற்பேட்டையில் ரூ.126 கோடியில் தங்க நகை தொழில் வளாகம் கட்டப்படும். என்ஏபிஎல் அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட அந்த வளாகத்தில் 2 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 1,500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மக்களவைத் தேர்தலின்போது, 'கோவை ரைசிங்' என்ற பெயரில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தோம். அதன்படி பல்வேறு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதில் முக்கியமானது கிரிக்கெட் ஸ்டேடியம். இதற்கான நிலம் கண்டறியப்பட்டு, பணிகள் தொடங்கியுள்ளன.

அனைத்து தரப்பினரின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் அரசாக திராவிட மாடல் அரசு திகழ்வதால், மக்கள் தொடர்ந்து ஆதரிக்கின்றனர். எத்தனை விமர்சனங்கள் வந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல், மக்கள் பணியைத் தொடர்வோம். கடந்த 50 ஆண்டுகளில் வட மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டின் வளர்ச்சி தெரியும். கொள்கை, லட்சியம், தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கான செயல்திட்டங்களால்தான் இது சாத்தியமானது.

திமுக தொடங்கும்போது வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று அண்ணா கூறினார். தெற்கை நாங்கள் வளர்த்திருக்கிறோம். தற்போது வடக்குக்கு வாரி வழங்குவது தெற்குதான். கோட்டையில் அமர்ந்து ஆட்சிபுரியாமல், களத்தில் பணியாற்ற வேண்டும் என்பதே என் குறிக்கோள்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி நன்றி கூறினார்.

**200 தொகுதிகளில் வெற்றி**

கோவை போத்தனூரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற திமுக நிர்வாகிகள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

திமுகவுக்கும், கோவைக்கும் வரலாற்று ரீதியான பிணைப்பு இருக்கிறது. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் முழுமையான வெற்றியைப் பெற வேண்டும்.

எனவே, நமது சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். நமது கொள்கைகளை இளைஞர்களிடம் விதைக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியில் பாசறைக் கூட்டங்களை நடத்தி, 10 முதல் 15 இளைஞர்களை கொள்கை வீரர்களாக உருவாக்க வேண்டும்.

கட்சி நிர்வாகிகள் குடும்பத்துக்கும், தொழிலுக்கும் நேரம் ஒதுக்கி கவனம் செலுத்த வேண்டும். அதே நேரத்தில் தினமும் 2 மணி நேரத்தை கட்சிக்கு ஒதுக்க வேண்டும். வார இறுதியில் ஒரு நாளை முழுமையாகக் கட்சிப் பணிக்கு ஒதுக்கி, தொண்டர்களுக்கும், கட்சிக்கும் பாலமாக இருக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்டப்பேரவைத் தொகுதிகளையும் திமுக கூட்டணி கைப்பற்ற வேண்டும்.

2026-ம் ஆண்டிலும் திமுகதான் ஆட்சி அமைக்கும். அதேநேரத்தில், அது சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது. 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டுமென இலக்கு நிர்ணயித்துள்ளேன். எழுச்சிமிகு திமுக ஏழாவது முறையும் ஆட்சியைப் பிடிக்க உழைப்போம்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

# உடல் வெப்பத்தை கண்டறியும் டி-சர்ட் தயாரிப்பு

## திருப்பூர் ஆடை வடிவமைப்பாளர் சோதனை முயற்சி

**திருப்பூர்**

ஆடை அணிபவரின் உடல் வெப்பத்தைக் கண்டறியும் புதிய ரக டி-சர்ட்டை திருப்பூரைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் தயாரித்துள்ளார்.

திருப்பூர் அம்மாபாளையத்தைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் சொக்கலிங்கம், பின்னலாடைத் துறையில் பல்லாண்டு அனுபவம் மிக்கவர். தற்போது, உணர்திறன் மை பதிக்கப்பட்ட டி-சர்ட் தயாரிக்கும் சோதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து சொக்கலிங்கம் கூறியதாவது:

உடல் வெப்பநிலை அதிகரிக்கும்போது டி-சர்ட்டில் உள்ள எழுத்துகள் மறையும். இதற்காக, தெர்மோ குரோமிக் முறையில், கொசுக்கள் அண்டாத வகையிலும், உடல் வெப்பத்தைக் கணிக்கும் வகையிலும் மை தயாரித்து, சோதனை முயற்சியாக டி-சர்ட் தயாரித்துள்ளேன். இந்த டி-சர்ட்டை பல்வேறு பரிசோதனைகளுக்கும் அனுப்பியுள்ளேன்.

இதுமறுசுழற்சிக்கு உட்படுத்தக் கூடியது. எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாத இந்த ஆடையில், நம் உடல் வெப்பநிலை 99 டிகிரி ஃபாரன்ஹீட்டை அடையும்போது நிறம் மாறும். வெப்பநிலை 99 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கு கீழே குறைந்தவுடன் அசல் நிறத்துக்கு திரும்பும். இத்தகைய ஆடைகளை பருத்தி, பாலியெஸ்டர் என அனைத்து ரக துணிகளிலும் தயாரிக்க இயலும்.



பிரத்யேக ஆடையில் வெப்பநிலையை சோதனை செய்யும் சொக்கலிங்கம்.

**விளையாட்டு வீரர்களுக்கு...**

இதேபோன்ற ஆடைகள் ஏற்கெனவே சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், குறிப்பிட்ட இடத்தில் மட்டும் சிப் வைக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டதால், உடம்பின் முழு பகுதி வெப்பநிலையை அறிய முடியாது.

ஆனால், நான் தயாரித்துள்ள இந்த ஆடைகள், விளையாட்டு வீரர்களுக்கு பொருத்தமானதாக இருக்கும். இதன் காப்புரிமை உள்ளிட்ட விஷயங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

திருப்பூரை சேர்ந்த பின்னலாடை தொழில்துறையினர் கூறும்போது, "உடல் வெப்பநிலையை அறியும் டி-சர்ட் குறித்து கேள்விப்பட்டோம். ஆனால், அதில் பயன்படுத்தப்படும் மையின் வேதியியல் மாற்றங்கள் குறித்து தெரியவில்லை" என்றனர்.

### தெலுங்கு சமுதாயத்தினருக்கு எதிரான பேச்சு

# கஸ்தூரி மீது மதுரை, திருச்சியில் வழக்கு

**மதுரை / திருச்சி**

தெலுங்கு சமுதாயப் பெண்களுக்கு எதிராகப் பேசியதாக நடிகை கஸ்தூரி மீது மதுரை மற்றும் திருச்சியில் பல்வேறு பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்கு பதிவு செய்தனர்.

தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்க மாநில செயற்குழு உறுப்பினர் சன்னாசி மதுரை திருநகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில், "நடிகை கஸ்தூரி ஒரு யூடியூப் சேனலில் நாயுடு சமூகத்தைப் பற்றியும், நாயுடு சமுதாயப் பெண்கள் குறித்தும் இழிவாகவும், அவதூறாகவும் பேசியுள்ளார்.

எனவே, நடிகை கஸ்தூரி மீதும், அவரது பேச்சை ஒளிபரப்பிய யூடியூப் சேனல் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், எனக்கும், எனது குடும்பத்துக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்தப் புகாரின்பேரில் நடிகை கஸ்தூரி மீது 352, 353 பிஎன்எஸ், 294 (பி) உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் காவல் ஆய்வாளர் துரைபாண்டி வழக்கு பதிவு செய்தார்.

இதேபோல, திருச்சி வயலூர் சாலை கீதா நகரைச் சேர்ந்த செல்வராஜ் என்பவர் மாநகர குற்றப்பிரிவு போலீஸாரிடம் நேற்று புகார் அளித்தார். அதன்பேரில், கஸ்தூரி மற்றும் அவரது பேச்சை ஒளிபரப்பிய யூடியூப் சேனல் மீது 3 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

ஏற்கெனவே, நடிகை கஸ்தூரி மீது சென்னை, ஆண்டிப்பட்டியில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### சேவை நோக்கில் மட்டுமே செயல்படுவதால்

# போக்குவரத்து துறையின் நிதிநிலை மேம்பட வாய்ப்பில்லை

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்

**அரியலூர்**

போக்குவரத்துத் துறையின் நிதிநிலை மேம்பட வாய்ப்பில்லை என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

அரியலூரில் திமுக மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஜெயங்கொண்டத்தை அடுத்த மகிமைபுரம் கிராமத்தில் அமைய உள்ள சிப்காட் தொழிற்பேட்டைக்கு வரும் 15-ம் தேதி முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்ட உள்ளார். தொடர்ந்து, அரியலூரில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நடப்பாண்டு தீபாவளியையொட்டி 5.75 லட்சம் பேர் சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்கு அரசுப் பேருந்துகளில் பயணித்துள்ளனர். கடந்த ஆண்டு 1.10 லட்சம் பேர் முன்பதிவு செய்து பயணித்திருந்த நிலையில், நடப்பாண்டு 1.52 லட்சமாக அதிகரித்துள்ளது.

**ஒரே நாளில் 75,000 பேர்**

தீபாவளிக்கு சொந்த ஊர் சென்றவர்களில் கடந்த 3-ம் தேதி மட்டும் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்து திரும்பி உள்ளனர். போக்குவரத்துத் துறை பொது மக்களுக்கான சேவை துறையாக செயல்பட்டு வருகிறது. இதில் லாப நோக்கம் ஏதுமில்லை. டீசல் விலை கடுமையாக உயர்ந்து, மற்ற மாநிலங்களில் பேருந்து கட்டணம் உயர்ந்த நிலையிலும், தமிழகத்தில் பேருந்து கட்டணம் உயர்த்தப்படவில்லை. சேவை நோக்கில் மட்டுமே செயல்படுவதால், போக்குவரத்துத் துறை நிதிநிலை மேம்பட வாய்ப்பில்லை.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

### மாணவிகளிடம் அநாகரிகமாக நடந்ததாக புகார்

# பள்ளி ஆசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்ய முடியாது

## உயர் நீதிமன்ற மதுரை அமர்வு மறுப்பு

**மதுரை**

பள்ளி மாணவிகளிடம் அநாகரிகமாக நடந்துகொண்ட புகாரின் அடிப்படையில் ஆசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்ய உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியை சேர்ந்த வெங்கடேசன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

பரமக்குடியில் உள்ள ஒரு பள்ளியில் விலங்கியல் முதுநிலை ஆசிரியராக 2007-ம் ஆண்டில் பணியில் சேர்ந்தேன். 17 ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். கடந்த 2017-ல் சில குற்றச்சாட்டுகள் அடிப்படையில் எனக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. பின்னர், எனக்கு ஓராண்டுக்கு சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. இதற்கு எதிராக மேல் முறையீடு செய்துள்ளேன்.

இதற்கிடையே, நான் மாணவிகளிடம் அநாகரிகமாக நடந்து கொண்டதாக புகார்கள் அளிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் குழந்தைகள் நல பாதுகாப்பு அதிகாரிகள் பள்ளியில் ஆய்வு செய்தனர். ஆனால், என்னிடம் விளக்கம் கேட்கவில்லை. தற்போது பள்ளி நிர்வாகம் என் மீது போலீஸில் புகார் அளித்துள்ளது. பின்னர், என்னை பணியிடை நீக்கம் செய்தனர். இதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஆர்.விஜயகுமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

பள்ளி நிர்வாகம் சார்பில் தாக்கல் செய்த பதில் மனுவில், "மனுதாரர் மாணவிகளிடம் சாதி ரீதியாகப் பேசி, அநாகரிகமாக நடந்து கொண்டதாக 34 மாணவிகள் மற்றும் 8 ஆசிரியைகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பள்ளி ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரித்து அளித்த அறிக்கையின்படி, மனுதாரர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். குழந்தைகள் நல பாதுகாப்பு அதிகாரிகளும் இது குறித்து விசாரித்தனர். பின்னர், மனுதாரர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்துள்ளனர். அதன்பேரில் போலீஸில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில், "பள்ளி நிர்வாக ஒழுங்கு நடவடிக்கைக் குழு பரிந்துரையின்பேரில் மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரது கோரிக்கை ஏற்புடையதல்ல" என்று நீதிபதி தெரிவித்தார். இதையடுத்து, மனுதாரர் தரப்பில் மனுவை திரும்பப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. அதற்கு அனுமதி வழங்கி, மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

selvakumar@hindutamil.co.in




- ஆர்.அஸ்வின் குமார், போத்தனூர்.

**செய்தி:** அஜித் கிடைக்க மாட்டாரா என திமுக முயற்சி செய்கிறது!
– ஹெச்.ராஜா

**பஞ்ச்:** ரஜினி கிடைப்பாரான்னு பாஜக முயற்சி செஞ்ச மாதிரிங்களா?
- சி.பி.செந்தில்குமார், சென்னிமலை.

**செய்தி:** 2 மணி நேரத்தை கட்சிக்காக ஒதுக்குமாறு கட்சி நிர்வாகிகளிடம் முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்!

**பஞ்ச்:** அப்படியே, உங்க எம்.எல்.ஏ.க்களையும் 2 மணி நேரம் ஒதுக்கி தொகுதி வேலைகளை பார்க்கச் சொல்லுங்க!
- என்.கே.பாலசுப்ரமணியன், சென்னை.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 11,000 கனஅடியாக உயர்வு

**தருமபுரி / மேட்டூர்**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த 4-ம் தேதி காலை விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று முன்தினம் விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக சரிந்தது. இந்நிலையில், நேற்று காலை நீர்வரத்து சற்றே அதிகரித்து விநாடிக்கு 11,000 கனஅடியாக உயர்ந்தது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு கடந்த சில நாட்களாக நீர்வரத்து அதிகரித்தும், சரிந்தும் காணப்படுகிறது. அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 10,566 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 9,929 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி, கால்வாய் பாசனத்துக்கு 600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணை நீர்மட்டம் நேற்று 106.92 அடியாகவும், நீர் இருப்பு 74.10 டிஎம்சியாகவும் இருந்தது.



துளசேந்திரபுரத்தில் நேற்று சோகமாக அமர்ந்திருந்த கமலா ஹாரிஸின் ஆதரவாளரான அமெரிக்க பெண்.

# கமலா ஹாரிஸ் சொந்த ஊரில் பொதுமக்கள் சோகம்

**திருவாரூர்**

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் போட்டியிட்டார்.

அவரது பூர்விக ஊரான, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள துளசேந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த அவரது உறவினர்கள் சிலர், கமலா ஹாரிஸ் வெற்றி பெற வேண்டி, அங்குள்ள அவரது குல தெய்வமான தர்ம சாஸ்தா கோயிலில் நேற்று முன்தினம் சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர்.

இதில், அமெரிக்காவை சேர்ந்த கமலா ஆதரவாளர்களான 2 பெண்கள், லண்டனைச் சேர்ந்த ஒரு பெண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையில் கமலா ஹாரிஸ் தோல்வியடைந்ததால், துளசேந்திரபுரம் கிராம மக்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். அதேபோல, அமெரிக்காவில் இருந்து வந்திருந்த கமலாவின் ஆதரவாளர்களும் கவலை அடைந்தனர்.


**ரானே (மெட்ராஸ்) லிமிடெட்**
(CIN : L65993TN2004PLC052856)
Rane Expanding Horizons
பதிவு அலுவலகம்: 'மைத்ரி', 132, கதீட்ரல் சாலை, சென்னை 600 086.
[e-mail: investorservices@ranegroup.com] [Website:www.ranegroup.com]
[Tel: 044-28112472 / 73]

**உறுப்பினர்களுக்கு அறிவிப்பு – தபால் ஓட்டு**

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 110 இன் படி, நிறுவனங்களின் விதி 22 உடன் படிக்கப்பட்டது (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 மற்றும் MCA சுற்றறிக்கைகள் (கீழே வரையறுக்கப்பட்டுள்ளது)

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 110 இன் படி, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014, விதி 20 & 22 இன் படி இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் விதிமுறை 44 (கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் பட்டியலிடுதல்) ஒழுங்குமுறை தேவைகள் 2014 உடன் படிக்கப்படும் என்று உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. "SEBI LODR") மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("MCA") வெளியிட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில், செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 09/2024, முந்தைய சுற்றறிக்கைகளுடன் படிக்கப்பட்டது ("MCA **சுற்றறிக்கைகள் என குறிப்பிடப்படுகிறது.**") மற்றும் தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் / ஒழுங்குமுறைகளின் பிற பொருந்தக்கூடிய விதிகள், தலைவர் மற்றும் நிர்வாகி அல்லாத இயக்குனர் திரு. ஹரிஷ் லக்ஷ்மனுக்கு (டிஐஎன்: 00012602) கமிஷன் செலுத்துவதற்கு ஒப்புதல் அளிக்க ஒரு சிறப்புத் தீர்மானத்தின் மூலம் உறுப்பினர்களின் ஒப்புதலை நிறுவனம் கோரியுள்ளது. அக்டோபர் 24, 2024 தேதியிட்ட அறிவிப்பில் ("அறிவிப்பு"), தொலை மின்னணு வாக்குப்பதிவு ("**மின்னணு வாக்குப்பதிவு**") மூலம் தபால் வாக்கு மூலம் இயக்குநர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேற்கூறிய MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, **நவம்பர் 07, 2024 வியாழன் அன்று நவம்பர் 01, 2024 ('கட்–ஆஃப் தேதி')** நிறுவனம்/ டெபாசிட்டரிகளுடன் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்ட பங்குகளை வைத்திருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பை நிறுவனம் அனுப்பியுள்ளது. டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் ஐடிகள் பதிவு செய்யப்படாத உறுப்பினர்கள், நிறுவனத்தின் மின்னஞ்சல் ஐடியான investorservices@ranegroup.com க்கு அஞ்சல் வாக்கெடுப்பு அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்கள் மற்றும் ஆவணங்களை ஆர்டிஏவின் மின்னஞ்சல் ஐடி srirams@integratedindia.in அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, இந்த தபால் வாக்குச்சீட்டிற்கு அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்பு, படிவங்கள் மற்றும் முன்பணம் செலுத்திய வணிக உறை ஆகியவற்றின் நகல் அனுப்பப்படாது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் மட்டுமே வாக்களிக்க முடியும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை எளிதாக்குவதற்காக நிறுவனம் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) உடன் ஈடுபட்டுள்ளது. தொலை மின்–வாக்களிப்பு காலம் **நவம்பர் 08, 2024 வெள்ளிக்கிழமை** அன்று (**காலை 9.00 மணி** IST) தொடங்கி **டிசம்பர் 07, 2024 சனிக்கிழமை** (**மாலை 5.00 மணி** IST) (இரண்டு நாட்களையும் உள்ளடக்கியது) முடிவடைகிறது. குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு அப்பால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தொகுதி அதன் பிறகு CDSL ஆல் முடக்கப்படும்.

உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், கட்–ஆஃப் தேதியில் மட்டும் தொலை மின்–வாக்களிக்கும் வசதியைப் பெற தகுதியுடையவர். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்–ஆஃப் தேதியின்படி, நிறுவனத்தின் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனத்தின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும். கட்–ஆஃப் தேதியில் உறுப்பினராக இல்லாத எவரும் இந்த அறிவிப்பை தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே கருத வேண்டும்.

https://www.evotingindia.com என்ற இணைப்பில் மின்னணு வாக்குப்பதிவு வசதி உள்ளது. தொலைதூர மின்–வாக்களிப்பு மூலம் வாக்களிப்பதற்கான செயல்முறை மற்றும் முறைகள், உடல்வடிவம், டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட படிவம் மற்றும் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்களால் வாக்களிப்பதற்கான செயல்முறை மற்றும் முறை ஆகியவற்றைக் குறிக்கும் அஞ்சல் வாக்குச் சீட்டு அறிவிப்புடன் நிறுவனத்தின் இணையதளத்தில் www.ranegroup.com, www.bseindia.com இல் ஆநஉ லிமிடெட்டின் இணையதளங்கள், www.nseindia.com இல் இந்திய நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் மற்றும் https://www.evotingindia.com இல் CDSL இணையதளம்.

திரு. பாலு ஸ்ரீதர், நிறுவனத்தின் செயலாளர் (ICSI உறுப்பினர் எண். FCS 5869) மற்றும் M/s இன் பங்குதாரர். ஏ.கே.ஜெயின் மற்றும் அசோசியேட்ஸ், நிறுவனச் செயலாளர்கள், அஞ்சல் வாக்குச்சீட்டை நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் ஆய்வு செய்வதற்காக ஆய்வுக்குழுவினரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தபால் வாக்குச்சீட்டின் முடிவுகள் 2 நாட்களுக்குள் தபால் வாக்குச்சீட்டுச் செயல்முறை முடிவடைந்த நாளிலிருந்து அதாவது, டிசம்பர் 09, 2024 திங்கட்கிழமை அல்லது அதற்கு முன்னதாக மாலை 5.00 மணிக்கு அறிவிக்கப்படும். (IST) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில். ஆய்வு செய்பவரின் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட முடிவுகள், நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com மற்றும் CDSL இன் www.evotingindia.com இணையதளத்தில் முடிவு அறிவிக்கப்பட்ட உடனேயே வைக்கப்படும். நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளுக்கும் முடிவுகள் உடனடியாக அனுப்பப்படும்.

CDSL இ–வாக்களிப்பு முறையின் மின்–வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருந்தால், helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது கட்டணமில்லா எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். 1800 21 09911.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியுடன் தொடர்புடைய அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தல்வி, சீனியர் மேலாளர், (CDSL) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது மாடி, மராத்தான் ஃப்யூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பௌண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க். , லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 அல்லது helpdesk.evoting@cdslindia.com க்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது கட்டணமில்லா எண்ணில் அழைக்கவும். 1800 21 09911 அல்லது எங்கள் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்கள் அவர்களின் மின்னஞ்சல் ஐடி srirams@integratedindia.in. பங்குதாரர்கள் அதன் சுற்றறிக்கை எண் மூலம் SEBI அறிமுகப்படுத்திய ஆன்லைன் தகராறு தீர்வு அமைப்பு (ODR) வசதியைப் பெற விருப்பம் உள்ளது. SEBI/HO/OIAE_IAD – 1/P/CIR/2023/131.

வாரியத்தின் உத்தரவின்படி
**ரானே (மெட்ராஸ்) லிமிடெட் நிறுவனத்திற்கு**
**எஸ் சுபா ஸ்ரீ**
**செயலாளர்**

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 07, 2024